1995 மார்ச் 15]

மூலமாக கடந்த 6 மாத காலமாகக் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதி மக்களுடைய இதயக் குடிசைகளில், இலவசமாய், நிரந்தரமாய், ஏற்றி வைக்கப்பட்ட ஒளி விளக்காய் தமிழகத்தினுடைய முதல்வர், நம் அன்னை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்ற நேரம் முதற்கொண்டுதான், சுதந்திரம் வாங்கப்பட்ட நாளிலிருந்து ஏற்பட்ட அடிப்படை வசதிகளை ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மயானப் பாதை, 5 பேர்கள் இருந்தால்கூட ஆழ் குழாய்க் கிணறு, சாலை வசதிகள் போன்றவற்றை மிக நன்றாக ஏற்படுத்தி, மக்கள் சீரோடும், பொலிவோடும் வாழ்கின்ற நிலையில், அவர்கள் பாராட்டுகின்ற அளவுக்குச் செய்து கொடுத்தமைக்காக இந்த அரசினை, அனைத்துக் கட்சியினரும் பாராட்டுகின்றதை இந்த அவையிலே தெரிவித்து, அதற்காக நெஞ்சார்ந்த, நன்றி கலந்த வணக்கங்களை நம் அன்னையினுடைய பொற்பாதங்களிலே பதித்து நன்றி கூறி, தொகுதி மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்பாக நான் இந்தக் கேள்வியைக் கொடுத்தேன். இன்றைக்கு அனைத்துக் குறைகளும் ஏறக்குறைய எல்லாமே முடிந்துவிட்ட நிலையில், அமைச்சர் அவர்கள், நாளைக்கு அவினாசிக்கு வருகை தர இருக்கிறார்கள். நமது அன்னையினுடைய ஆசியைப்பெற்று அங்கு நடக்கவிருக்கின்ற விழாவில் நமது அமைச்சர் அவர்கள் அதைத் திறந்து வைத்து எங்களுக்குப் பெருமை தந்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன், நன்றி.

முற்பகல் *11-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

19—

ஏற்காட்டில் கோல்ப் விளையாட்டு மைதானம் அமைத்தல்

21509*—டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சுற்றுலா மையமான ஏற்காட்டில் ஒரு கோல்ப் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலேயே செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கோல்ப் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஏற்காட்டில் சுற்றுலாத் துறை மூலம் ஏற்காட்டு ஏரியில் சுமார் 4 இலட்சம் ரூபாய் செலவில் அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளில் உள்ளதுபோல் உள்நாட்டுப் பயணிகள் மட்டுமின்றி, வெளிநாட்டுப் பயணிகளையும் கவர்ந்திழுக்கும் வண்ணம், அங்கே கோல்ப் மைதானம் அமைக்கும் திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி, அங்கே சிறுவர்களுக்கு, சிறுவர் இரயில் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான், தமிழகத்திலே சுற்றுலாத் துறை மிகப் பெரிய அளவிற்கு வளர்ந்து வருகிறது. எனவே, ஏற்காட்டைப் பொறுத்தளவில் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனைத்து அடிப்படை வசதிகளையும், மேம்பாட்டு வசதிகளையும் செய்வதற்காக மிகப் பெரிய தொகையை இந்தத் துறைக்கு ஒதுக்கி வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய உரிய முறையான கோரிக்கையை வைப்பார்களானால், அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் சேவையே மகேசன் சேவை என்பதை மனதில் கொண்டும், மனுநீதி சோழன் வழி நின்று, மாவட்டந்தோறும் மனுநீதி நாள் கண்டு, மக்களுக்கு நல்லாட்சி புரியும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்

1995 மார்ச் 15]

தலைவியின் பொற்கால ஆட்சியில்தான் சுற்றுலாத் துறை என்பதைப் பற்றி வீடியோ படங்கள் மூலமும், சுற்றுலா விழாக்கள் மூலமும், பொருட்காட்சிகள் மூலமும் பொதுமக்களிடையே நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளபடியால், தனியார் துறையில் கோல்ப் மைதானம் அமைக்க முன்வருபவர்களை அரசு ஊக்குவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களில் சுற்றுலாத் துறை மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மூலமும் அங்கே விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல ஏற்காட்டிலும் கோல்ப் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் உள்ளாட்சித் துறையோடு கலந்து பேசி உரிய கருத்துரு முறையாக தயாரிக்கப்படும். அதைப்போல சிறுவர் இரயிலைப் பொறுத்தளவில் அந்தத் திட்டம் தற்போது சுற்றுலாத் துறையினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

20—

பெண்ணாகரம் தொகுதியில்
கிராமிய நூற்பு மையம் துவங்குதல்

*34292—டாக்டர் ஆ. வெ. **புருஷோத்தமன்:***

மாண்புமிகு கதர் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெண்ணாகரம் தொகுதியில் கிராமிய நூற்பு மையம் துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம், பெண்ணாகரம் தொகுதியில், நாகராசம்பட்டி, சின்னம்பட்டி ஆகிய இரண்டு ஊர்களில் கிராமிய நூற்பு மையம் அமைக்க கதர் வாரியத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.